## நந்தீசர் அருளிய

# அஷ்டமா சித்தி 05

நாடியதோர் குருபதத்தைப் பணிந்து போற்றி
நயமாக வுரைத்திடுவேன் நந்தி பின்னும்
தேடியதோர் மந்திரத்தா லட்ட சித்தி
திறமாக விளம்புகிறேன் யோகி யோர்க்கு
கூடியதோர் அந்தமதைச் சிதம்பரத்திற்
குணமான காலுடனே கூட்டி முட்ட
ஆடியதோ ரைம்புலனை மூலத் துள்ளே
அருளிலகு முல கணபதி காப்பாமே. 1

காப்பான பூரண சூஸ்திர முன்னுறுங்
கட்டான ஐம்பதுவும் பதினா லுள்ளே
வாப்பான வழிதுறைக்குங் குரு முறைக்கும்
வழங்குமிந்த வுலகோர்க்கு வழியைக் காட்டுங்
கோப்பான வாதமடா லிங்கப் போக்கு
குணமுடனே பாலகர்க்குக் குருவாய்ச் செய்ய
மாப்பான நூறிற்கால் தலையாய்க் கட்டி
மறைவாகச் சொல்லிவிட்டேன் கருச்சேராதே. 2

சேராமற் சொன்னதொரு லிங்கப் போக்கு
திறமுடைய யேக மூலிகை யினாலே
பாராமற் செய்து கொண்டு சுத்தி செய்யப்
பாங்குடனே சுருக்கிடு நீ சுத்தி யாச்சு
வீராகச் சுத்தியது செய்த பின்பு
விளங்கியதோர் கட்டதனைப் பின்னாகச் செய்
கூராகச் செய்ததொரு லிங்கந் தன்னை
குணமாக வங்கமதிற் கூட்டி யாட்டே. 3

ஆட்டியதோர் வங்கமதை லிங்கஞ் செய்து
அடைவாக உருக்கி நீ மணியாய் வாங்கு
கூட்டியதோர் அம்மணியோடு வெள்ளி யேழுங்
குணமான தாமிரமும் மூன்றுங் கூட்டி
நாட்டியதோர் குருவது தான் ஒன்று கூட்டி
நயமாக உருக்கியதை யெடுத்துப் பாரு
சூட்டியதோர் வயதெட்டு கடைக்கு யேற்குஞ்
சொல்லாதே கருக்களெல்லாஞ் சொன்னால் தோஷம் 4

தோஷமது தீர்வதற்குப் பீஜங்கோசம்
சொல்லுகிறேன் அகாரமெடு உகாரஞ்சேரு
வகாரமெடு பிரணவத்தின் நிலையிற் சேரு
பாசமுடன் மனம் லயித்து மௌன மாகிப்
பாங்கான நாதவொலி சிதம்பரத்தில்
ஓசையுடன் நடம்புரியும் சுழியாம் வாசி
ஒருவருக்கும் விள்ளாதே ஐந்தும் முற்றே. 5

நந்தீசர் அஷ்டமா சித்தி 05 முற்றும்..